www.kanchikalvi.com

<u>தகவல் உரிமைச்சட்டம் (2005) கீழ் விண்ணப்பிக்கப்பட்டது</u>




அனுப்புநர்

மா.முருகேசன்,
த/பெ.T. மாரிமுத்து,
2/39 மேற்குத்தெரு,
வெள்ளாரம்,
தூத்துக்குடி-628401.

பெறுநர்

பொதுத்தகவல் அலுவலர் அவர்கள்,
துணை இயக்குநர் (நிர்வாகம்)
தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநரகம்
கல்லூரிச் சாலை
சென்னை-600006.

---

அய்யா,

பொருள் : தகவல் பெறும் உரிமைச்சட்டம் (2005) கீழ் தங்களது நிர்வாகம் தொடர்பான தகவல்கள் பெறுதல் சார்பு.

கோரப்படும் தகவல்கள்:

1. பள்ளி வளாகம், வகுப்பறை, கழிப்பறையை மாணவர்களைக் கொண்டு சுத்தம் செய்ய வைக்கலாமா?
2. ஆசிரியர்களின் சாப்பாட்டு பாத்திரம், பள்ளி சமையலறை பாத்திரங்கள் போன்றவற்றை மாணவர்களை கொண்டு கழுவ வைக்கலாமா?
3. சனிக்கிழமைகளில் பள்ளி செயல்படும் போது, பள்ளி முழுநேரம் செயல்பட வேண்டுமா?
4. பள்ளிகளில் மாணவர்களின் தமிழ், ஆங்கில வாசிப்புத் திறனை மேம்படுத்த, தினமும் தமிழ்,ஆங்கிலம் தினசரி பத்திரிக்கைகள் வாங்க வேண்டுமா?
5. அரசு ஆண்டுதோறும் மாணவர்களுக்கு வழங்கும் பல்வேறு வகையான நலத்திட்ட உதவிகள், பொருட்களை அதன் தொடர்புடைய அலுவலகத்துக்கு சென்று எடுத்து வர ஆகும் செலவுத்தொகையை அரசு கொடுக்கிறதா? இந்த செலவை தலைமை ஆசிரியரோ அல்லது பள்ளி ஆசிரியர்களோ செலவிட வேண்டுமா? இந்த செலவுத்தொகையை மாணவர்களிடம் வசூலிக்கலாமா?
6. உதவித் தொடக்கக்கல்வி அலுவலகங்களில் நடைபெற்று வரும் ஆசிரியர்களுக்கான பல்வேறு வகையான பணிகளுக்கு அங்கு பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் உதவித் தொடக்கக்கல்வி அலுவலர்கள் ஆசிரியர்களிடம் வசூல் செய்யலாமா?
7. உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் தங்களது அலுவலகங்களில் ஆசிரியர்களை அலுவலகப் பணி செய்ய ஆணையிடலாமா?
8. உதவித் தொடக்கக்கல்வி அலுவலகங்களில் ஏற்படுத்தப்பட்ட பணியிடங்களின் அல்லது பதவிகளின் பெயர்களை வரிசையாக குறிப்பிடவும்.
9. உதவித் தொடக்கக்கல்வி அலுவலர்கள்,தலைமையாசிரியர்கள் அலுவலகம் மற்றும் பள்ளிகளில் கைப்பேசியினை பயன்படுத்தலாமா? பயன்படுத்தலாம் எனில் எப்போது மட்டும் பயன் படுத்தலாம்.
10. உதவித் தொடக்கக்கல்வி அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்த அலுவலகக்குறிப்பு மற்றும் அலுவலக முத்திரைகள் மாதிரிப் படிவங்களாக 18 வகைகளில் உள்ளதன் நகல்கள்?

நன்றி

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,

நாள் : 18.06.2015
இடம் : வெள்ளாரம்.

www.Kanchikalvi.com

www.kanchikalvi.com

தமிழ்நாடு தொடக்கக் கல்வி துணை இயக்குநர்(நிர்வாகம்) மற்றும் பொது தகவல் வழங்கும் அலுவலரின் செயல்முறைகள், சென்னை – 600 006.

ஓ. மு. எண் 16116/ஜெ2/2015 நாள் .07.2015.

-----

பொருள்: தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் தகவல்கள் கோருதல் – சார்பாக.

பார்வை துாத்துக்குடி மாவட்டம், திரு. மா.முருகேசன் என்பாரின் மனு நாள் 18..06..2015.

-----

பார்வையில் காணும் கடிதத்தில் மனுதாரரின் மனுவில் கோரப்பட்டுள்ள தகவல்களுக்கு கீழ்க்கண்டவாறு தகவல் வழங்கப்படுகிறது.

1. பள்ளி மாணவர்களை சுத்தம் செய்ய வைக்கக்கூடாது.
2. பள்ளி மாணவர்களைக் கொண்டு சுத்தம் செய்ய வைக்கக்கூடாது.
3. பள்ளி வேலை நாட்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அந்தந்த உதவி தொடக்கக் கல்வி அலுவலரின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் உதவி தொடக்க கல்வி அலுவலரின் அறிவுரையின்படி பள்ளி செயல்படுகிறது.
4. நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை.
5. மாணவர்களிடம் வசூலிக்கக் கூடாது. நலத்திட்ட உதவிகள் சார்ந்த பொருட்களை அலுவலகத்திற்கு எடுத்துச் செல்ல ஆகும் செலவுத் தொகை அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.
6. ஆசிரியர்களிடம் பணம் வசூல் செய்யக்கூடாது.
7. ஆணையிடக்கூடாது.
8. அந்தந்த மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலரை அணுகி பெற்றுக் கொள்ளவும்.
9. பள்ளிகளில் ஆசிரியர்கள் கைபேசி பயன்படுத்தக் கூடாது. உதவி தொடக்கக் கல்வி அலுவலர், தலைமையாசிரியர் மாணவர்களின் கற்பித்தல் பணிக்கு இடையூறு ஏற்படாவண்ணம் அத்தியாவசிய தேவைக்கேற்ப பயன்படுத்தலாம்.
10. அந்தந்த மாவட்டத்தில் உள்ள உதவி தொடக்கக் கல்வி அலுவலரை அணுகி சார்ந்த விவரங்களை பெற்றுக் கொள்ளவும்.

தொடக்கக் கல்வி துணை இயக்குநர் (நிர்வாகம்)
மற்றும் பொது தகவல் அளிக்கும் அலுவலர்,
தொடக்கக் கல்வி இயக்ககம்,சென்னை.6.

பெறுநர்
திரு. மா.முருகேசன்,
த/பெ டி. மாரிமுத்து,
2/39 மேற்குத் தெரு,
வெள்ளாரம்,
துாத்துக்குடி – 628 401.

www.kanchikalvi.com